[திரு. தி. வேல்முருகன்] [*2022 ஏப்ரல் 28*

நீதிபதியைக் கொண்டு ஒரு விசாரணை ஆணையம் அமைத்தோ, இந்தக் குறைகளுக்கெல்லாம் நிவாரணம் ஏற்படுத்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தொழில் துறையில் மகத்தான சாதனை படைத்துவரும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எளிய மக்களின் வாழ்வுரிமைச் சிக்கல்களையும் கவனத்தில்கொள்ள வேண்டுமென்கின்ற வேண்டுகோளை முன்வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய கோரிக்கைகளை முழுமையாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். எனவே, இந்தச் சட்டப் பேரவைக் கூட்டத்தொடர் முடிந்தவுடன், ஒருநாள் நானே அங்கு வருகிறேன். நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையும் அங்கே வைத்துக்கொண்டு, அரியலூர் மாவட்டத்திற்கு நாங்களும் வந்து, நீங்கள் அங்கேயிருக்கக்கூடிய சூழ்நிலையில் உங்களையும் அழைத்து அவர்களிடத்திலே நாம் நிச்சயமாகப் பேசுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

4. அறிக்கைகள் அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு முனைவர்* T.R.B. *ராஜா, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.*

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் மூன்றாவது மற்றும் நான்காவது ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*